சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை 08

ந,கஎண்,10528/அ5/2021 நாள் 14.2 2022

பொருள் 2021-2022 ஆம் கல்வியாண்டில் பள்ளியில் மாநிலப்பாடத்திட்டத்தில் பயிலும் பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கான முதல்/ இரண்டாம் திருப்புதல் தேர்வுகள்- தேர்வுகள் நடத்துதல்- அறிவுரைகள் வழங்குதல் – சார்ந்து.

பார்வை சென்னை 06. அரசுத்தேர்வுகள் இயக்குநரின் கடித ந.க.எண் 026826/எச்1/2021 நாள் 31.01.2021

பார்வையில் காணும் அரசுத்தேர்வுகள் இயக்குநரின் கடிதத்தின் படி 2021 -2022 ஆம் கல்வியாண்டில் மாநிலப்பாடத்திட்டத்தில் பயிலும் பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கான முதல் திருப்புதல் தேர்வுகள் 9.2.2022 (புதன்கிழமை) முதல் நடைபெறுகின்றன,. வினாத்தாள் கட்டுக்காப்பு மையத்திலிருந்து வினாத்தாட்களை பள்ளிகள். 10 வகுப்பிற்கு காலை 9 .00 மணியளவிலும் 12 ஆம் வகுப்பிற்கு மதியம் 1.00 மணியளவிலும் பெற்று கொள்ள வேண்டும்.

தேர்வு மைய முதன்மைக்கண்காணிப்பாளர்களான தலைமையாசிரியர்கள் தேர்வு நடைபெறுவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்னதாக அதாவது 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு காலை 9,50 மணிக்கும், 12 வகுப்பு மாணவர்களுக்கு மதியம் 1,50 மணிக்கும் சீலிடப்பட்ட வினாத்தாள் கட்டுக்கள் பிரிக்கப்பட்டு மாணவர்களுக்கு வினாத்தாட்கள் வழங்கப்படவேண்டும் தவறும் பட்சத்தில் நடவடிக்கைக்கு மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது..

மாவட்டக்கல்வி அலுவலர்கள் தங்கள் ஆளுகைக்குட் பட்ட வினாத்தாள் கட்டுக் காப்பாளர்கள் மற்றும் தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்களான தலைமையாசிரியர்களுக்கு மேற்காண் அறிவுரைகளை பின்பற்றுமாறும் மந்தனத் தன்மையுடன் தேர்வினை நடத்திட அறிவுறுத்தமாறு ம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்,

ஒம்/.

முதன்மைக்கல்வி அலுவலர்
சென்னை

பெறுநர்

1அனைத்து வகைப்பள்ளித்தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள் சென்னை மாவட்டம்,

2 அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள். சென்னை மாவட்டம்.

3 கல்வி அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை -03